மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற அவசரக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் வருடம் பிப்ரவரி மாதம் 28-ந் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.கு.அசோக்குமார், பி.காம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1. இந்நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரி வசூல் துரிதப்படுத்த பொருட்டு பொதுமக்களுக்கு வரியினை செலுத்த தினசரி தினமலர் தமிழ் நாளிதழில் விளம்பரம் 14.01.2018 அன்று பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.6552/- வரப்பெற்றுள்ளது. மேற்படி, தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)2017-18-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் தினமலர் தமிழ் நாளிதழ்க்கு ரூ.6552/- தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சிக்கு சொந்தமான தற்காலிக கடைகள் சுங்கம் வசூலிக்கும் உரிமை மூன்றாண்டுகளுக்கு 2015-16 முதல் 2017-18 வரை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தது, தற்போது மூன்றாண்டுகள் முடிவுற்றால் குத்தகைதாரர் செலுத்திய கூடுதல் ஏலப்பொறுப்பு தொகை ரூ.100000/- யை குத்தகைதாரர் திருமதி.எம்.ராதா என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:3780/2014/அ1)

3. இந்நகராட்சியின் கீழ்காணும் நிதியின் வரவு-செலவு திட்டத்தினை தனி அலுவலரின் கூட்ட நடவடிக்கை ஒப்புதலுக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| 1 | 2017-2018-ம் ஆண்டு திருத்திய வருவாய் நிதி மற்றும் மூலதன நிதி வரவு-செலவு திட்டம் |
| 2 | 2017-2018-ம் ஆண்டு திருத்திய குடிநீர் வடிகால் நிதி வரவு-செலவு திட்டம் |
| 3 | 2018-2019-ம் ஆண்டு திருத்திய வருவாய் நிதி மற்றும் மூலதன நிதி வரவு-செலவு திட்டம் |
| 4 | 2018-2019-ம் ஆண்டு திருத்திய குடிநீர் வடிகால் நிதி வரவு-செலவு திட்டம் |

அலுவலகக்குறிப்பு:ஒப்புதல் அளிக்கலாம்.
(ந.க.எண்:பி1/333/2017)

4. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MA.IV) துறை வெளியிட்டுள்ள அரசு ஆணை 166, நாள்:23.11.2016-ன்படி நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகங்களில் தூய்மை செய்யும் பணிக்கு மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம், வேலூர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள தொகையில் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை தற்காலிக நியமித்து பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில், இந்நகராட்சியில் 6 நகராட்சி பள்ளிகள் மற்றும் 1 அரசு பள்ளி இயங்கி வருகின்றன.

அரசு ஆணையில் தெரிவித்துவாறு 6 நகராட்சி பள்ளிகள் மற்றும் 1 அரசு பள்ளி மொத்தம் 6 பணியாளர்கள் தேவைப்படுகின்றன. இப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயித்துள்ளபடி ஊதியம், சேமநல நிதி பிடித்தம் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் உட்பட ஒருவருக்கான செலவு விவரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1 | தினக்கூலி | ரூ.326.00 |
| 2 | EPF 12.5% | ரூ.40.75 |
| 3 | காப்பீடு(1200/365) | ரூ.3.00 |
| 4 | சீருடை | ரூ.5.75 |
| 5 | பாதுகாப்பு உபகரணங்கள் | ரூ.10.12 |
| 6 | 10% நிர்வாக பங்கு தொகை | ரூ.32.60 |
| 7 | ஒரு நாள் ஒரு நபருக்கு | ரூ.418.00 |
| 8 | 6 நபருக்கு செலவினம் நாள் ஒன்றுக்கு 418x6 | ரூ.2508 |
| 9 | தளவாட பொருட்கள் மற்றும் கிருமி நாசினிகள் பராமறிப்பு தொகை | ரூ.500 |
| 10 | நாள் ஒன்றுக்குரிய செலவினத் தொகை | ரூ.3008 |
| 11 | தொராயமாக ஒரு மாதத்திற்கான செலவினம். ரூ.30008x30 | ரூ.90240 |

மேற்படி பணியினை கல்விநிதியில் மேற்கொள்வதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான தொகை ரூ.9,93,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அதற்கான தொகை ரூ.9,93,000/-க்கு கல்விநிதியில் செலவு மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

5. இந்நகராட்சியில் சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி, குத்தகை மற்றும் வரியில்லா இனங்கள், பிறப்பு-இறப்பு சான்றிதழ்கள், தொழில் உரிமங்கள் உள்ளிட்ட அனைத்து செயல்முறைகளும் Centralized Web Based Software Application ( Urban Tree Information System (UTIS) Software ) ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கண்ட பணிகள் அனைத்தும் கணினி மூலம் நடைபெற்று வருகிறது. மேலும் இவ்வலுவலகத்தில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும் போது சில நேரங்களில் மின்இணைப்பு துண்டிக்கப்படுவதால் கணினிகள் பழுதாகின்றது.எனவே, அலுவலகத்தில் உள்ள 5 KVA UPS பழுது செய்து உபயோகத்திற்கு கொண்டுவரவும் மற்றும் கீழ்கண்டுள்ள விவரப்படி UPS மற்றும் அதனை சார்ந்த உபகரணங்களை புதியதாக வாங்கி கொள்ளும் பணிக்கு 23.02.2018-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s.Spyder Technology,<br>Tirupper. | 1.00%<br>(மதிப்பீடு விகிதத்தை விட குறைவு) |
| 2 | M/s. Venus Tech,<br>Salem | 1.02%<br>(மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

அலுவலகக்குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்:1-ல் உள்ள M/s.Spyder Technology, Tirupper அவர்களின் மதிப்பீடு விகிதத்தைவிட 1.00% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
(ந.க.எண்:0354/2018/இ1)

6. இந்நகராட்சியில் சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி, குத்தகை மற்றும் வரியில்லா இனங்கள், பிறப்பு-இறப்பு சான்றிதழ்கள், தொழில் உரிமங்கள் உள்ளிட்ட அனைத்து செயல்முறைகளும் Centralized Web Based Software Application ( Urban Tree Information System (UTIS) Software ) ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கண்ட பணிகள் அனைத்தும் கணினி மூலம் நடைபெற்று வருகிறது. மேலும் இவ்வலுவலகத்தில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அனைத்து உபகரணங்களும் குறைந்த அளவில் உள்ளதால் பணிகளை உடனுக்குடன் மேற்கொள்வதில் சிரமமாக உள்ளது. இக்குறைகளை களையும் பொருட்டு கீழ்கண்டுள்ள விவரப்படி கணினி மற்றும் அதனை சார்ந்த உபகரணங்களை புதியதாக வாங்கி கொள்ளும் பணிக்கு 23.02.2018-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s.Spyder Technology,<br>Tirupper. | 1.00%<br>(மதிப்பீடு விகிதத்தை விட குறைவு) |
| 2 | M/s. Venus Tech,<br>Salem | 1.02%<br>(மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

அலுவலகக்குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்:1-ல் உள்ள M/s.Spyder Technology, Tirupper அவர்களின் மதிப்பீடு விகிதத்தைவிட 0.99% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
(ந.க.எண்:0353/2018/இ1)

7. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை 2018-19 முதல் 2020-21 வரை மூன்றாண்டுக்கு 5% உயர்வு அடிப்படையில் 02.02.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்துக்கொண்டு உயர்ந்த ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தொகையினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வரிசை எண்:01:நகராட்சி பேருந்து நிலையம் சுங்கக்கட்டணம் பேருந்து நிலையத்திற்குள் தினசரி வந்து போகும் அனைத்து பேருந்துகளுக்கும் ரூ.8/- சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் யாரும் கலந்துக்கொள்ளவில்லை.

வரிவை எண்:02: அம்பேத்கர் நகரில் உள்ள ஆடு அறுக்கும் தொட்டி சுங்கக்கட்டணம் உரிமைக்கு ஏலத்தில் யாரும் கலந்துகொள்ளவில்லை, ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் கலந்து கொண்டவர்கள் விவரம்

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த புள்ளி தொகை செலான் எண்/நாள் |
|---|---|---|
| 1 | திரு.பிச்சாண்டி,<br>நெ:106,கச்சாலன் தெரு,<br>வாலாஜாபேட்டை | 2,00,000/-<br>10029/01.02.2018 |
| 2 | திரு.குருநாதன்,<br>திருத்தணி தெத்து தெரு,<br>வாலாஜாபேட்டை | 1,50,000/-<br>10030/01.02.2018 |

வரிசை எண்:3: வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குள் விற்பனைக்குவரும் இனங்கள் 2018-19 முதல் 2020-21 வரை சுங்க கட்டணம் வசூலித்துகொள்ளும் உரிமைக்கு ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் ஒப்பந்துபுள்ளியில் யாரும் கலந்துகொள்ளவில்லை.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்விதொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.மோகன்,<br>எல்லம்மாபேட்டை,<br>வாலாஜாபேட்டை | ஏலக்கேள்வி ஏழவில்லை |
| 2 | திரு.இராதா,<br>நெ:7,திருத்தணி தெத்து தெரு,<br>வாலாஜாபேட்டை | ஏலக்கேள்வி ஏழவில்லை |

வரிசை எண்:4.வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் 99 கடைகளுக்கு 2018-19 முதல் 2020-21 வரை சுங்கக்கட்டணம் வசூலிக்கும் உரிமைத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளவில்லை.

வரிசை எண்:5, பேருந்து நிலையத்தில் நகராட்சி கட்டண கழிப்பிடத்தில் சுங்ககட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு ஏலத்தில் யாரும் கலந்துகொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் கலந்துகொண்டவர்கள் விவரம்.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.குருநாதன்,<br>திருத்தணி தெத்து தெரு,<br>வாலாஜாபேட்டை | 3,60,000/- |
| 2 | திரு.எஸ்.பாலாஜி,<br>சௌக்கார் தெரு,<br>வாலாஜாபேட்டை | 2,76,000/- |

வரிசை எண்:6.மாடு அறுக்கும் தொட்டியில் சுங்கம் கட்டணம் வசூல் உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளவில்லை.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)வரிசை எண்:1,4 மற்றும் 6 ஆகிய இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் யாரும் கலந்துகொள்ளவில்லை. எனவே, மறுஒப்பந்தப்புள்ளி மற்றும் மறுஏலம் கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2)வரிசை எண்:2-ல் கண்டுள்ள ஆடு அறுக்கும் தொட்டிக்கு திரு.பிச்சாண்டி என்பவர் ரூ.2,00,000/-க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுத்துள்ளார், இத்தொகையானது 2017-18-ம் ஆண்டின் துறை வசூல் ரூ.3,16,300/-க்கு(ஜனவரி-2018 வரை) ரூ.1,16,300/- குறைவாக உள்ளதால் மறுஒப்பந்தப்புள்ளி மற்றும் மறுஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3)வரிசை எண்:3-ல் கண்டுள்ள இனத்திற்கு ஏலத்தில் கலந்துகொண்டு ஏலக்கேள்வி கேட்காததால் மறுஒப்பந்தப்புள்ளி மற்றும் மறுஏலம் கோர மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

4)வரிசை எண்:5-ல் கண்டுள்ள இனத்திற்கு திரு.எஸ்.குருநாதன் என்பவர் ரூ.3,60,000/-க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். இத்தொகையானது 2017-18-ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.2,75,625/-க்கு ரூ.84,375/- அதிகமாக உள்ளது. மேலும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.2,62,708/-க்கு ரூ.97,292/-யை அதிகமாக உள்ளதால் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். திரு.குருநாதன் என்பவரின் தொகை ரூ.3,60,000/- ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

5)தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வரிசை எண்:1,2,3,4, மற்றும் 6 ஆகிய இனங்களை மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2870/2017/அ1)

8. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை 2018-19 முதல் 2020-21 வரை மூன்றாண்டுக்கு 5% உயர்வு அடிப்படையில் 22.02.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்துக்கொண்டு உயர்ந்த ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தொகையினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வரிசை எண்:01:நகராட்சி பேருந்து நிலையம் சுங்கக்கட்டணம் பேருந்து நிலையத்திற்குள் தினசரி வந்து போகும் அனைத்து பேருந்துகளுக்கும் ரூ.8/- சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் யாரும் கலந்துக்கொள்ளவில்லை.

வரிவை எண்:02 ஆடு அறுக்கும் தொட்டி சுங்கக்கட்டணம் உரிமைக்கு இரண்டாவது முறையாக கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்துக்கொண்டவர்கள் விவரம்:

**ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள்**

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.பிச்சாண்டி,<br>கச்சாலன் தெரு,<br>வாலாஜாபேட்டை | 2,10,000/- |
| 2 | திரு.குருநாதன்,<br>திருத்தணி தெத்து தெரு,<br>வாலாஜாபேட்டை | 1,55,000/- |

**ஏலத்தில் கலந்து கொண்டவர்கள்**

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.முரளி,<br>நெ:7/2, ஆற்காடு தெத்து தெரு,<br>வாலாஜாபேட்டை | 2,00,900/- |
| 2 | திருமதி.கே.மல்லிகா,<br>நெ:13/2, சுவர்ணர்பேட்டை,<br>வாலாஜாபேட்டை | 2,01,000/- |

மேற்படி, குறிப்பிட்டுள்ள வரிசை எண்:2-ல் குறிப்பிட்டுள்ள குத்தகைதாரர் ரூ.2,01,000/- உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ளார். மேலும் ஏலக்கேள்வி தொகை ரூ.2,01,000/-விட திரு.பிச்சாண்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,10,000/- உயர்வாக உள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,10,000/-யை 2017-18-ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.1,98,450/-யை விட ரூ.11,550/- அதிகமாக உள்ளது. இருப்பினும் சென்ற ஆண்டு குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் குத்தகை தொகை செலுத்தாததால் மூன்றாம் ஆண்டிற்கு துறை மூலம் வசூல் செய்யப்பட்டதில் பிப்ரவரி-2018 06.02.2018 வரை ரூ.3,16,300/- யை வசூல் செய்யப்பட்டது. இத்தொகையானது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தொகை ரூ.2,10,000/-க்கு ரூ.1,06,300/- குறைவாக உள்ளது.

மேலும், துறை வசூல் பணி மேற்கொள்ள ஒரு துப்புரவு பணியாளரை மேற்கொண்டு வசூல் பணி செய்யப்பட்டு வருகிறது. தற்போது 64 துப்புரவு பணியாளர்கள் பணிபுரியுமிடத்தில் 21 துப்புரவு பணியிடங்கள் காலியாக உள்ளது. இதனால் துப்புரவு பணி பாதிக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணியாளரின் ஒரு வருடத்திற்கு ரூ.314328/- செலவாகிறது. எனவே, மேற்படி ஒரு துப்புரவு பணியயாளரின் ஊதிய விகிதத்தில் கணக்கிடும் கொண்டும் பராமரிப்பு செலவினம் மற்றும் இதர செலவினங்கள் கருத்தில் கொண்டு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,10,000/-யை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வரிசை எண்:3 தற்காலிக கடைகள் சுங்கக்கட்டணம் உரிமைக்கு கீழ்கண்டுள்ளவாறு இரண்டு நபர்கள் ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டனர், ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளவில்லை.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்விதொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.இராதா,<br>நெ:7,திருத்தணி தெத்து தெரு,<br>வாலாஜாபேட்டை | 5,52,100/- |
| 2 | திரு.மோகன்,<br>எல்லம்மாபேட்டை,<br>வாலாஜாபேட்டை | 5,51,000/- |

மேற்குறிப்பிட்டுள்ள வரிசை எண்:1-ல் கண்டுள்ள திருமதி.இராதா என்பவர் ரூ.5,52,100/-க்கு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ளார். இத்தொகையானது சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.5,37,138/-விட ரூ.14,962/- அதிகமாக உள்ளது. மேலும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.5,11,966/-யை விட ரூ.40,134/- யை அதிகமாக உள்ளதால் திருமதி.இராதா என்பவர் கேட்டுள்ள உயர்ந்த ஏலத்தொகை ரூ.5,52,100/- ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வரிசை எண்:4. தினசரி மார்க்கெட் 99 கடைகளுக்கு சுங்கக்கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளவில்லை. திருமதி.மல்லிகா என்பவர் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டு ரூ.6,50,000/-க்கு ஏலக்கேள்வி கேட்டுள்ளார்.

வரிசை எண்:5, மாடு அறுக்கும் தொட்டியில் சுங்கம் கட்டணம் வசூல் உரிமைக்கு மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளவில்லை.

அலுவலகக்குறிப்பு:

1)வரிசை எண்:1,2,4 மற்றும் 5 மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்

2)வரிசை எண்:3-ல் கண்டுள்ள திருமதி.இராதா என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.5,52,100/-யை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

3)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2870/2018/அ1)

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.